Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tmi12n062026.03
Vol. 12, No. 06 (2026) 12 06 2026 p23–30 TIRJTS-2026-0030

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

சங்க இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை முறைகள்

The Lifestyle of People in Sangam Literature

Dr. J. KRISHNA KUMARI[1,*iD]

[1] Vel Tech Multi Tech Dr. Rangarajan Dr. Sakunthala Engineering College, Avadi, Chennai, Tamil Nadu, India.
***Corresponding author:** Dr. J. KRISHNA KUMARI Dr. J. KRISHNA KUMARI,
krishnakumari.j@veltechmultitech.org
ORCID iD: Dr. J. KRISHNA KUMARI Dr. J. KRISHNA KUMARI https://orcid.org/0009-0003-0437-6101

ARTICLE INFO

Article history
Received: 23 October 2026
Revised: 25 October 2026
Accepted: 25 October 2026

Article ID
TIRJTS-2026-0030

Peer review
Double-blind peer review

Keywords
சங்க இலக்கியம்
மக்களின் வாழ்க்கை முறைகள்
ஐந்திணை
தமிழர் பண்பாடு
சமூக அமைப்பு
உணவுப் பழக்கவழக்கங்கள்
உடை மற்றும் அணிகலன்கள்
குடும்ப வாழ்க்கை
பெண்களின் பங்களிப்பு
தொழில்கள்
வேளாண்மை
வணிகம்
விருந்தோம்பல்
காதல் மற்றும் திருமணம்
சமய நம்பிக்கைகள்
கல்வி மற்றும் கலைகள்
அரசியல் மற்றும் ஆட்சி முறை
கீழடி தொல்லியல் ஆய்வு
பண்டைய தமிழர் நாகரிகம்

ABSTRACT

Sangam literature is an important source for understanding the lifestyle, culture, social structure, economy, political system, religious beliefs, and traditions of ancient Tamils. The Ettuthogai and Pathuppattu provide valuable information about the daily lives of people during the Sangam period. This study examines the lifestyle of ancient Tamils through the concept of the five landscapes (Ainthinai), namely Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai, each associated with distinct occupations, food habits, customs, and ways of life. It also explores their food, clothing, ornaments, housing, family relationships, agricultural practices, handicrafts, trade, and maritime activities. Special attention is given to women's roles, love and marriage, hospitality, generosity, valour, education, arts, religious beliefs, and political administration. Literary works such as Purananuru, Akananuru, Kurunthogai, and Pathitrupathu, along with archaeological findings from sites such as Keezhadi, provide valuable evidence for understanding ancient Tamil society. The study highlights the close relationship between people and nature, the diversity of social groups, and the cultural values reflected in Sangam literature. Thus, Sangam literature and archaeological evidence serve as significant sources for understanding the historical heritage, social life, and cultural achievements of the ancient Tamils.

How to cite this article: Dr. J. KRISHNA KUMARI, D. J. K. K. (2026). சங்க இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை முறைகள். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 23–33. https://doi.org/10.63300/tmi12n062026.03
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

சங்க இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை முறைகள்

முனைவர் ஜா. கிருஷ்ணகுமாரி, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வேல்டெக் மல்டிடெக் டாக்டர்.ரங்கராஜன் டாக்டர்;.சகுந்தலா பொறியியல் கல்லூரி, ஆவடி, சென்னை. 600062.

முன்னுரை:

தமிழ் மொழியின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டும் முக்கியமான இலக்கியச் செல்வமாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. கி.மு.300 முதல் கி.பி 300 வரையிலான காலகட்டத்தில் உருவானதாகக் கருதப்படும் சங்க இலக்கியங்கள், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், சமூக அமைப்பு, பொருளாதாரம், அரசியல், மதம் மற்றும் வாழ்க்கை

முறைகளைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. இவ்விலக்கியங்கள் வெறும் கற்பனைப் படைப்புகள் அல்ல. அக்கால மக்களின் உண்மையான வாழ்க்கைச் சான்றுகளாக விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அகப்பாடல்களும் புறப்பாடல்களும் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையை முழுமையாக எடுத்துரைக்கின்றன. அவர்களின் குடும்ப அமைப்பு, உணவுப் பழக்கம், தொழில்கள், வணிகம், கல்வி, பெண்களின் நிலை, வீர வாழ்க்கை, விருந்தோம்பல், கலைகள் போன்ற பல அம்சங்கள் இதில் வெளிப்படுகின்றன.

சங்ககாலம் - ஓர் அறிமுகம்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்கள் மிகப் பழமையான இலக்கியச் செல்வமாக விளங்குகின்றன. சங்கப் பாடல்கள் அக்காலத் தமிழர்களின் வாழ்க்கை நிலையை நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்துரைக்கின்றன. எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவையும், பத்துப்பாட்டு நூல்களும் சங்ககால வாழ்வியலை அறிய உதவும் முக்கிய ஆதாரங்களாகும்.

சங்கப் பாடல்களில் அரசர்கள், வீரர்கள், புலவர்கள் மட்டுமல்லாமல் உழவர்கள், மீனவர்கள், வேட்டுவர்கள், ஆயர்கள், வணிகர்கள், கைவினைஞர்கள், பெண்கள், குழந்தைகள் போன்ற பல்வேறு சமூகப் பிரிவினரின் வாழ்க்கையும் இடம்பெற்றுள்ளது. இதனால் சங்க இலக்கியம் சமூகத்தின் பல அடுக்குகளையும் அறிந்துகொள்ள உதவுகிறது.

ஐந்திணையும் மக்களின் வாழ்க்கையும்:

சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்வதற்கு ஐந்திணைக் கோட்பாடு மிகவும் முக்கியமானதாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என இயற்கைச் சூழலின் அடிப்படையில் வாழ்க்கை வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தொழில், உணவு, வாழ்க்கை முறை, தெய்வம் மற்றும் பண்பாடு இருந்தன.

குறிஞ்சி நிலம்:

மலை மற்றும் மலை சார்ந்த பகுதிகள் குறிஞ்சி எனப்பட்டன. இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் வேட்டை, தேன் சேகரித்தல், கிழங்கு சேகரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். வேட்டையாடுதல் அவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது . குறிஞ்சித் திணையின் தெய்வமாக முருகன் குறிப்பிடப்படுகிறார்.

முல்லை நிலம்:

இப்பகுதி மக்களின் முக்கியத் தொழில் கால்நடை வளர்ப்பதாகும். ஆயர்கள் மாடுகளை மேய்த்து வாழ்ந்தனர். பால், தயிர், வெண்ணெய், நெய் போன்ற பால் சார்ந்த உணவுகள் அவர்களின் வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்றன.இவர்கள் கால்நடைகளைக் கொண்டு இடம்பெயர்ந்து வாழும் வாழ்க்கை முறையும் காணப்பட்டது.

மருத நிலம்:

ஆறுகள், வயல்கள், நீர்வளம் நிறைந்த சமவெளிகள் மருத நிலமாகும். நெல், கரும்பு போன்ற பயிர்கள் இங்கு விளைவிக்கப்பட்டன. உழவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டு உணவு உற்பத்திக்கு அடிப்படையாக விளங்கினர். இந்திரன் மருத நிலத்தின் தெய்வமாகக் கூறப்படுகிறார்.

நெய்தல் நிலம்:

கடலும் கடல் சார்ந்த பகுதிகள் நெய்தல் நிலமாகும். மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல், முத்துக் குளித்தல், கடல் வாணிகம் போன்றவை இப்பகுதி மக்களின் முக்கியத் தொழில்களாக இருந்தன. வருணன் இந்நிலத்துடன் தொடர்புடைய தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறார்.

பாலை நிலம்:

வறண்ட நிலப் பகுதியாக பாலை நிலம் சித்தரிக்கப்படுகிறது. பயணம், பிரிவு, வழிப்பயணத் துன்பங்கள் போன்றவை இந்நிலத்தின் இலக்கியக் கூறுகளாக அமைந்தன. கொற்றவை பாலை நிலத்துடன் தொடர்புப்படுத்தப்படுகிறார்.

ஐந்திணை மரபு இயற்கைச் சு+ழலுக்கும் மனித வாழ்க்கைக்கும் இடையிலான நெருங்கியத் தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

உணவு, உடை மற்றும் அணிகலன்கள்:

சங்ககால மக்களின் உணவுப் பழக்கங்கள் அவர்கள் வாழ்ந்த நிலம் மற்றும் செய்த தொழிலைப் பொறுத்து மாறுபட்டன. நெல், தினை, வரகு போன்ற தானியங்கள் முக்கிய உணவுப் பொருட்களாக இருந்தன. காய்கறிகள், கீரைகள், பழங்கள், கிழங்குகள், பால், தயிர், மீன் மற்றும் இறைச்சி போன்றவையும் உணவில் இடம்பெற்றன.

மருத நில மக்களிடம் நெல் சார்ந்த உணவுகள் முக்கியத்துவம் பெற்றன. குறிஞ்சி நில மக்களிடம் தினை, தேன், கிழங்கு போன்றவை பயன்பட்டன. முல்லை நில மக்கள் பால் பொருட்களை அதிகம் பயன்படுத்தினர். நெய்தல நில மக்களிடம் மீன் மற்றும் கடல்சார் உணவுகள் முக்கிய இடம் பெற்றன.

உணவு என்பது உடல் தேவையை நிறைவு செய்வதோடு மட்டுமல்லாமல் விருந்தோம்பலின் அடையாளமாகவும் இருந்தது. விருந்தினர்களுக்கு உணவு வழங்குதல், புலவர்களையும் கலைஞர்களையும் உபசரித்தல் போன்ற பண்புகள் சங்க இலக்கியங்களில் போற்றப்படுகின்றன.

உடைகளைப் பொறுத்தவரை, பருத்தி ஆடைகள் பயன்படுத்தப்பட்டன. நெசவுத் தொழில் வளர்ச்சியடைந்திருந்தது. மக்களின் தொழில், காலநிலை, பொருளாதார நிலை ஆகியவற்றுக்கு ஏற்ப ஆடைகளின் வகைகள் மாறுபட்டிருக்கலாம்.

பெண்களும் ஆண்களும் தங்கம், முத்து, மணிகள், சங்கு போன்ற பொருட்களால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர். காதணிகள், வளையல்கள், மணிமாலைகள் போன்றவை அழகுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

கீழடி அகழாய்வில் கிடைத்த மணிகள், வளையல்கள், காதணிகள் மற்றும் நெசவுத் தொழிலுடன் தொடர்புடைய பொருட்கள் அக்கால மக்களின் கைவினைத் திறனையும் அணிகலன் பயன்பாட்டையும் அறிய உதவுகின்றனர்.

குடியிருப்புகள் மற்றும் குடும்ப வாழ்க்கை:

சங்ககால மக்கள் கிராமங்கள், சிற்றூர்கள், நகரங்கள், துறைமுகங்கள் போன்ற பல்வேறு இடங்களில் வாழ்ந்தனர். குடியிருப்புகளின் அமைப்பு இயற்கைச் சு+ழலுக்கும் மக்களின் பொருளாதார நிலைக்கும் ஏற்ப மாறுபட்டது.

கிராமப்புறங்களில் இயற்கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு எளிய வீடுகள் அமைக்கப்பட்டிருக்கலாம். நகரங்களில் செங்கல் கட்டடங்கள், கூரை ஓடுகள், கிணறுகள் போன்ற கட்டமைப்புகள் இருந்ததற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. மதுரை, உறையு+ர், காவிரிப்பு+ம்பட்டினம் போன்ற நகரங்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. இங்கு வணிகர்கள், கைவினைஞர்கள், புலவர்கள், கலைஞர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட மக்கள் வாழ்ந்தனர்.

கீழடி அகழாய்வில் கிடைத்த செங்கல் கட்டமைப்புகள், உறைகிணறுகள், கூரை ஓடுகள் போன்றவை அக்காலக் குடியிருப்புகளையும் கட்டடத் தொழில்நுட்பத்தையும் புரிந்துகொள்ள உதவுகின்றன.

சங்ககால மக்களின் சமூக வாழ்க்கையில் குடும்பமானது முக்கிய இடம் பெற்றிருந்தது. பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோருக்கிடையே அன்பும் பாசமும் நிலவின. குடும்பப் பொறுப்பு, விருந்தோம்பல், பகிர்ந்துண்ணுதல் போன்றவை உயர்ந்த பண்புகளாகக் கருதப்பட்டன. அதே நேரத்தில், சமூகத்தில் செல்வம், தொழில், அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்திருக்கலாம். எனவே சங்ககால மக்களின் வாழ்க்கையை ஒரே மாதிரியானதாகக் கருதாமல் பல்வேறு சமூகப் பிரிவுகளின் அனுபவங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொழில்களும் பொருளாதார வாழ்க்கையும்

சங்ககால மக்களின் பொருளாதாரம் பல்வேறு தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல், நெசவு, மண்பாண்டத் தயாரிப்பு, உலோகத் தொழில், மணிகள் செய்தல் மற்றும் வாணிகம் ஆகியவை முக்கியமான தொழில்களாக விளங்கின.

வேளாண்மை பொருளாதாரத்தின் முதன்மையான அடித்தளமாக இருந்தது. உழவர்கள் நிலத்தை உழுது விதைத்து, நீர்ப்பாசனம் செய்து, பயிர்களை அறுவடை செய்தனர். நெல், தினை, வரகு, கரும்பு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டன. வேளாண்மை மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்ததுடன் வாணிக வளர்ச்சிக்கும் உதவியது.

கொல்லர்கள் இரும்புக் கருவிகளையும் ஆயுதங்களையும் செய்தனர். தச்சர்கள் மரப்பொருட்களை உருவாக்கினர். குயவர்கள் மண்பாண்டங்களையும் நெசவாளர்கள் துணிகளையும் தயாரித்தனர். மணிகள் செய்தல் போன்ற கைவினைத் தொழில்களும் வளர்ச்சியடைந்திருந்தன. இத்தொழில்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவின.

பெண்களின் வாழ்க்கையும் சமூகப் பயன்பாடும்:

சங்க இலக்கியங்களில் பெண்கள் தலைவி, தோழி, தாய், மனைவி போன்ற நிலைகளில் சித்தரிக்கப்படுகின்றனர். ஔவையார், காக்கைப்பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்தனர். பெண்கள் குடும்பப் பணிகளுடன் வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, நெசவு போன்ற செயல்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கலாம்.

விருந்தோம்பல், நட்பு, வீரம், கொடை, அன்பு, மானம் போன்ற பண்புகள் சங்ககாலச் சமூகத்தில் போற்றப்பட்டன. பாரி, ஓரி, பேகன், அதியமான் போன்ற வள்ளல்களின் கொடைப் பண்புகள் இலக்கியங்களில் புகழப்பட்டுள்ளன.

சமூகப் பண்புகளும் விழுமியங்களும்:

சங்ககாலச் சமூகத்தில் விருந்தோம்பல், நட்பு, வீரம் கொடை, பண்பு, மானம் போன்ற உயர்ந்த பண்புகள் போற்றப்பட்டன. விருந்தினர்களுக்கு உணவு வழங்குதல், புலவர்களை ஆதரித்தல், ஏழைகளுக்கு எதவுதல் போன்ற செயல்கள் சிறந்த அறங்களாகக் கருதப்பட்டன. குறிப்பாக பாரி, ஓரி, பேகன், அதியமான் போன்ற வள்ளல்களின் கொடைச் சிறப்புகள் சங்க இலக்கியங்களில் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன.

புறநானூறு போன்ற நூல்கள் மன்னர்களின் வீரம், வீரர்களின் தியாகம், வள்ளல்களின் கொடை மற்றும் மக்களின் சமூக வாழ்க்கை ஆகியவற்றை எடுத்துரைக்கின்றன. இப்பண்புகள் அக்கால மக்களின் உயர்ந்த வாழ்க்கை இலட்சியங்களை வெளிப்படுத்துகின்றன. அதே வேளையில், சமூகத்தில் செல்வம், தொழில் மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்திருக்கலாம் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, பெண்களின் வாழ்க்கையையும் சமூகப் பண்புகளையும் ஆராய்வதன் மூலம் சங்ககாலத் தமிழர்களின் குடும்ப உறவுகள், பெண்களின் பங்களிப்பு, மனிதநேயம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ள முடிகிறது. இவை பழந்தமிழர் நாகரிகத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தும் முக்கியக் கூறுகளாகத் திகழ்கின்றன.

காதல், திருமணம் மற்றும் சமய நம்பிக்கைகள்:

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்ற நூல்கள் காதல், சந்திப்பு, பிரிவு, காத்திருத்தல், ஊடல் போன்ற உணர்வுகளை எடுத்துரைக்கின்றன. ஐந்திணை மரபில் குறிஞ்சி புணர்தலையும், முல்லை காத்திருத்தலையும், மருதம் ஊடலையும், நெய்தல் இரங்கலையும், பாலை பிரிவையும் குறிக்கின்றன.

முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை போன்ற தெய்வங்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவாக நடுகல் நாட்டும் வழக்கமும் இருந்தது. இவை அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளையும் வீர மரபையும் வெளிப்படுத்துகின்றன.

கல்வி, இலக்கியம், கலை மற்றும் ஆட்சி:

சங்ககாலத்தில் தமிழ் மொழியும் இலக்கியமும் சிறந்து விளங்கின. தொல்காப்பியம் தமிழின் இலக்கண மரபை எடுத்துரைக்கிறது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற நூல்கள் அக்கால மக்களின் வாழ்க்கை, காதல், வீரம், அரசியல் மற்றும் வாணகம்

பற்றிய செய்திகளை வழங்குகின்றன. புலவர்கள் மன்னர்களையும் வள்ளல்களையும் பாடினர். பாணர்கள் யாழ் போன்ற இசைக்கருவிகளை இசைத்து மக்களை மகிழ்வித்தனர்.

ஆட்சி முறை:

சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர்கள் முக்கிய ஆட்சியாளர்களாக விளங்கினர். நாட்டைப் பாதுகாத்தல், பகைவர்களை எதிர்த்தல், மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுதல் போன்றவை மன்னர்களின் பொறுப்புகளாக இருந்தன. புறநானூறு போன்ற நூல்கள் அக்கால அரசியல் மற்றும் வீர வாழ்க்கையை அறிய உதவுகின்றன.

தொல்லியல் சான்றுகள்:

சங்ககால மக்களின் வாழ்க்கையை அறிய இலக்கியங்களுடன் தொல்லியல் ஆய்வுகளும் உதவுகின்றன. கீழடி அகழாய்வில் கட்டட எச்சங்கள், தமிழ் - பிராமி எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள், மணிகள் மற்றும் கைவினைப் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை அக்கால மக்களின் குடியிருப்பு வாழ்க்கை, எழுத்துப் பயன்பாடு, தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

முடிவுரை:

சங்ககால மக்களின் வாழ்க்கை முறைகள் தமிழர்களின் பழமையான நாகரிகம், பண்பாடு மற்றும் வாழ்வியல் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன. ஐந்திணை அடிப்படையிலான வாழ்க்கை, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல், கைவினைத் தொழில்கள் மற்றும் வாணிகம் ஆகியவை அக்கால மக்களின் பொருளாதார வறர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன.

உணவு, உடை, குடியிருப்பு, குடும்ப அமைப்பு, பெண்களின் பங்களிப்பு, காதல், சமய நம்பிக்கைகள், கல்வி, கலை மற்றும் ஆட்சி போன்ற பல்வேறு துறைகளில் வங்ககால மக்கள் தனித்துவமான பண்பாட்டை உருவாக்கினர். விருந்தோம்பல், கொடை, வீரம், அன்பு, நட்பு போன்ற உயர்ந்த பண்புகள் சங்க இலக்கியங்களில் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களும் கீழடி போன்ற தொல்லியல் ஆய்வுகளும் பழந்தமிழர்களின் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்வதற்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. எனவே, சங்ககால மக்களின் சாழ்க்கையை ஆராய்வது தமிழர்களின் வரலாறு, மொழி மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளைப் புரிந்துகொண்டு அவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதற்கு உதவுகிறது.

துணை நூற்பட்டியல்: References

[1]. தொல்காப்பியர் - தொல்காப்பியம் , பொருளதிகாரம்

[2]. புறநானூறு - வீரம், கொடை மற்றும் அரசியல்.

[3]. அகநானூறு - காதல் மற்றும் குடும்ப வாழ்க்கை.

[4]. குறுந்தொகை, நற்றிணை - அக வாழ்க்கை மற்றும் ஐந்திணை மரபு

[5]. பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி - ஆட்சி, நகர வாழ்க்கை மற்றும் வாணிகம்.

[6]. தமிழநாடு தொல்லியல் துறை - கீழடி அகழாய்வு அறிக்கைகள்.